# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை 1 - 2020

சுட்டெண் : …………… **தமிழ் (T–72)** நேரம்:3.00 மணித்தியாலம்

**பகுதி - I**

**அறிவுறுத்தல்கள்** : பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடைதருக

## பகுதி I

1. **மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(அ) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்து யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே

(i) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச்சிறப்பு எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?
(ii) இச்செய்யுளில் அமைந்துள்ள உவமை அணியை எடுத்துக்காட்டி விளக்குக
(iii) பாடலின் திணை ,துறை ,பாடியவர் முதலியவற்றை எழுதுக

(ஆ) நன்று என்று புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை நாவாய்
சென்று இனித் தருதிர் என்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்று என குனிக்கும் அம்பொன் குவடு என குபேரன் மானம்
ஒன்று என நாணிப் பல்வேறு உருவு கொண்டனைய ஆன

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக
(ii) இச்செய்யுளில் இடம்பெற்ற உவமைகளை எடுத்துக் காட்டி விளக்குக
(iii) இங்கு வெள்ளிக்குன்று, பொன்குவடு, குபேரன்மானம் எனக் குறிப்பிட்டவை யாவை?

(12 + 12 = 24 புள்ளிகள்)

2. **‘அ’** பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

**‘ஆ’** பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

**அ)** ஏதோ அவதியிலே ஏகுகிறீர்
ஏனப்பா,
நீர்தாம் உலகு நிலை மாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி,என் தாழ்மை வணக்கங்கள்
ஆள் சுருளும்
வெய்யிலிலே
நீர் போகும் வீதி நடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்
கை இல்லான்
தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்
துன்புறுத்தி
வீங்கும் பசியால் வழுந்தானோ
ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறை உயிரோ
செத்த உடலோ - தெரியவில்லை
சற்றெனினும்
நில்லாது,நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு
செல்லுங்கால்
வீசிவிடுதல் விரும்பினீர்
வேண்டாம்,ஓய்
கூசும் அவமதிக்கும் கொள்கையான்
ஆசை மிக
ஆதலினால் காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்
அன்னோன் கடுந்தூக்கம்
பாதியிலே
கெட்டு விடக்கூடும்
கெடுக்காதீர் பாவம்,இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்
கிட்டப்போய்
மெல்லக் குனிந்து இடுக
இல்லையெனில் உம்பாட்டில்
செல்க
இதுவே சிறப்பு

1. பிச்சைக்காரன் மீது கவிஞர் கொண்ட பரிவு எவ்விதம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
2. மனிதமற்ற மனிதரைப் பார்த்து கவிஞர் எவ்வாறு ஏளனம் செய்கின்றார்?
3. சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு செல்லுங்கால ் வீசிவிடுதல் விரும்பினீர இவ்வரிகள் ஏற்படுத்தும் உணர்வினைச் சுருக்கமாக விளக்குக?
4. கவிஞரின் கவித்துவம் பற்றி கருத்துரைக்குக

(ஆ)

அவனை இயக்கும் ஆதார சுருதி –நாகாத்தை சற்று நேரத்திற்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் ‘பெய்து’ விட்டு கெண்டைக்கால், வயற்சுழியில் புதையப் புதைய லாகவ நடை போட்டுச் சென்றாள்.

சுழியில் புதைந்த அவளுடைய ஓவ்வோர் அடியும் ,சரவணமுத்துவின் பம்மிப் பருத்த மார்பைத் தாண்டிக் கொண்டு அவன் இதயத்தின் மீது ‘மலர்த்தடத்தை’ப் பதித்து,விட்டிருந்தது. ‘களுக்’ ‘களுக்’ என்ற இன்ப சுருதியோடு அவள் அடிபெயர்த்து வைத்த ஒய்யாரம் சிற்சில சமயம் சுழியில் ஆழப்புதையுண்ட தன் கால்களை அவள் மீட்பதற்குச் செய்த பிரயத்தனம் அதிலிருந்து பிறந்த பரதம் கை என்ற வாழைக்குருத்து ஒய்யார லயத்தோடு வீசித்துவண்ட கோலம் அதில் குதிபோட்ட கண்ணாடி வளையல்களின் ‘கலீர்’ ‘கலீர்’ என்ற சங்கீதம் பனையோலைப் பெட்டியைத் தாங்கியிருந்த அந்தத் தலையின் கலைக்கோலம் ஏதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள் ,அள்ளி முடித்திருந்த கொண்டைக்குத் திருஷ்டி பட்டு விடாமல் ‘கவசம்’போல் காத்து நின்ற முக்காடு தளிர் மேனியை இறுக்கிப் பற்றியிருந்த சட்டை பாதி வயிறு வெளியில் தெரிய முந்தானையை இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த காம்பீர்யம் இவையெல்லாம் சேர்ந்து சரவணமுத்துவைப் ‘பாடு பாடு’ என்று பணித்தன.

(1) நாகாத்தை மீது சரவணமுத்து கொண்ட காதல் எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?
(2) கூத்துடன் தொடர்புபட்ட விபரணங்களாக இப்பகுதியில் இடம்பெற்ற விடயங்களை எழுதுக
(3) ஆசிரியர் பயன்படுத்தும் உவமை,உருவக அணிகளை எடுத்துக்காட்டி அவற்றின் சிறப்பை விளக்குக
(4) ஆசிரியரின் மொழிநடை பற்றி கருத்துரைக்குக

(4 X 4 = 24 புள்ளிகள்)

## பகுதி II

**3.** பெரியோரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தை துணையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

(1) பெரியாரது இலக்கணமும் அவர்களைத் துணைக்கோடலும்

(2) பெரியோரைத் துணைக் கொள்வதன் சிறப்பும் பயனும்

(3) பெரியோரைத் துணைக் கொள்ளாமையால் ஏற்படும் குற்றம்

(4) உவமை அணிப் பயன்பாடு (20 புள்ளிகள்)

**4.** பரதன் சேனையுடன் வருவதனை குகன்காண்பது முதல் தன் வேடுவ வீரர்களுக்கு வீர வார்த்தைகள் உரைத்தது வரையுள்ள பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

(அ) குகனது சீற்றம்

(ஆ) குகன் சேனைகளுக்க இட்ட கட்டளை

(இ) குகனது வீர வார்த்தைகள்

(ஈ) நான்கு உவமை அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக

(20 ள்ளிகள்)

5. தேம்பாவணி காட்சிப் படலத்தில் சாந்தி மரியாள் இருவருக்கும் இடையிலான உரையாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

(1) சாந்தியின் வினாக்களில் காணப்பட்ட இயேசு எளியனாக வந்த தன்மை
(2) சாந்தியின் வினாக்களுக்கு மரியாள் அளித்த பதில்கள்
(3) இறைவனின் பெருமைகள்
(4) உவமை,உருவக அணிகளை கையாள்வதில் வீரமாமுனிவரின் ஆற்றல்

(20 புள்ளிகள்)

6. கவிஞர் இ.முருகையனின் இரு துயரங்கள் என்னும் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன வெளிப்பட்டிருக்குமாற்றை விளக்குக

(அ) ஒவ்வொருவர் துயரமும் அவரவர்க்கு வலியானது
(ஆ) பாமாவின் துரோகத்தனம்
(இ) நெறியாளரின் பங்களிப்பு
(ஈ) ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு (20 புள்ளிகள்)

7. புதுமைப் பித்தனின் 'தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை' என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

(1) நாகரிகம் என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம்
(2) கிராம மக்களின் சிறப்புக்கள்
(3) நகர வாசிகள் கிராமத்திற்கு சென்றாலும் கிராம வாழ்வை வாழ மாட்டார்கள் என்பதற்கு ஆசிரியர் தரும் நியாயப்பாடுகள்
(4) கட்டுரையாசிரியர் பயன்படுத்திய உத்திகள் (20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக

i. மணிமேகலைக் காப்பியத்தில் 'மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையில்' அந்திப் பொழுதுக் காட்சிகள் வர்ணிக்கப்பட்டிருக்கும் விதம்
ii. அமலனாதிபிரான் எனும் பதிகத்தில் திருவரங்கப் பெருமான் மீது திருப்பாணாழ்வார் கொண்ட பக்தி
iii. காரணமாலையில் மக்கா நாட்டின் இயற்கை அழகும் வளமும் வர்ணிக்கப்பட்ட விதம்
iv. 'கவிஞன்' என்னும் கவிதையில் உண்மைக் கவிஞனின் பண்புகள் கூறப்பட்ட விதம்
v. எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதையில் பிரதான கதா பாத்திரம் தொடர்பான சித்தரிப்பு

(20 புள்ளிகள்)